FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120311

1. District : தூத்துக்குடி PS: V.V.A.C Year: 2026 FIR No. 03/26 Date 02.04.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 29.03.26 at 10.24 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 31.03.26 at 18.32 hrs

Time Period : Time from : Time to : 01.04.26 at 15.09 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 02.04.26 Time : 11.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 02.04.26 Time : 12.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Computer Printed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 6 KM தூரம் கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : தூத்துக்குடி நகரம் சாலையில் உள்ள
முறைக் காவல் எண் முகவரி மாநகராட்சி மைதான் பேருந்து நிலையம் அருகில்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. M. சுகுமார் (b) Father's/ Husband's Name : V. சவரிமுத்து
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 52/26 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : 4/54, மேலரதவீதி, மேலமரியநாதபுரம், சாயர்புரம், தூத்துக்குடி
தொழில் முகவரி புரம், தூத்துக்குடி கிழக்கு தாலுகா, தூத்துக்குடி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) தூ. கனையாசன், சார்பு ஆய்வாளர், தூத்துக்குடி
தாலுகா காவல் நிலையம், தூத்துக்குடி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

02/04/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

02.04.26 at 14.15 hrs.

Name: பெயர் ஆ. ரூபா தேவராணி
Rank: நிலை ..... No. எண் .....
காவல் ஆய்வாளர்,
பெ. நீ. க. பாரை,
நீலகிரி.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:03/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 02.04.2026-ம் தேதி காலை 11.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல், திண்டுக்கல் கிழக்கு தாலுகா, மேற்கு மரியநாதபுரம், தேவ சகாயநகர், கதவு எண்.7/64-ல் வசிக்கும் V.சவேரியார் மகன் S.M.சுகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று இன்று 02.04.2026-ம் தேதி காலை 12.00 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், S.M.சுகுமார், த/பெ.V.சவரியார், கதவு எண்.7/64, தேவ சகாயநகர், மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல் கிழக்கு தாலுகா, திண்டுக்கல். பெறுநர் உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கறிஞராக திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் திண்டுக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் SEA HORSE WELFARE ASSOCIATION என்ற பெயரில் பதிவு செய்து, உரிமம் எண். 118/2015 நாள். 02.07.2015ன் படி பெற்று அதன் பின்பு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No. 1288/2016, W.M.P.(MD) No. 1067/2016 ன் படி மனு தாக்கல் செய்து மனமகிழ் மன்றம் நடத்துவதற்கு அனுமதி பெற்று, கதவு எண்.157/4, இந்திரா நகர், பள்ளபட்டி கிராமம், பழைய கொட்டபட்டி சாலை, திண்டுக்கல் என்ற முகவரியில் வைத்து நடத்தி வருகிறேன். நான் இந்த மனமகிழ் மன்றத்தினை சட்ட விதிகளுக்கு உட்பட்டு முறையாக நடத்தி வருகிறேன். இந்த மனமகிழ் மன்றத்தில் சுமார் 30 உறுப்பினர்கள் சந்தாதாரராக உள்ளனர். அவர்கள் தினமும் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை இந்த மனமகிழ் மன்றத்திற்கு வந்து செல்வார்கள். கடந்த 6 மாதமாக N.பஞ்சம்பட்டியை சேர்ந்த திரு.அருண் என்பவரை இந்த மனமகிழ் மன்றதில் எனக்கு உதவியாக பணியமர்த்தியுள்ளேன். கடந்த 28.03.2026ம் தேதி சனிக்கிழமை நான் வீட்டில் இருந்த போது என்னுடைய உதவியாளர் திரு.அருண் காலை சுமார் 8.36 மணிக்கு எனக்கு செல்போனில் அழைத்து திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய SI திரு.கலையரசன் என்பவர் Club க்கு வந்துள்ளதாகவும், என்னிடம் பேச வேண்டும் எனச் சொன்னதாகவும் கூறினார். அப்போது அருணுடைய போனிலேயே நான் அங்கு வந்திருந்த SIயிடம் பேசினேன். அதற்கு

அவர் என்னப்பா என்னை வந்து பார்க்கவேபில்லை எனக் கேட்டார். அதற்கு நான் இதுவரை யாரையுமே பார்த்தது இல்லை எனக் கூறினேன். அதனால் அவர் அவரது செல்போன் எண்ணை அருணிடம் கொடுப்பதாகவும், அவருடைய செல்போன் எண்ணிற்கு என்னை பேசுமாறும் கூறினார். பின்பு காலை சுமார் 11.25 மணிக்கு நான் Clubக்கு சென்று SI அவர்களின் செல்போன் எண். 8220387009க்கு தொடர்பு கொண்ட போது அவர் அழைப்பினை எடுக்கவில்லை. அதன் பின்பு சுமார் 11.27 மணிக்கு செல்போனில் பேசினேன். அப்போது அவர் என்னை நேரில் சந்திக்க வேண்டும் எனக் கூறினார். நானும் சரி என்று கூறினேன். அதன் பின்பு இரவு சுமார் 9.44 மணிக்கு என்னுடைய செல்போன் எண். 7010352303ல் அழைத்து, மறுநாள் காலை நேரில் வந்து சந்திக்குமாறு கூறினார். மறுநாள் 29.03.2026ம் தேதி நான் வீட்டில் இருந்த போது காலை சுமார் 10.00 மணிக்கு என்னை செல்போனில் அழைத்தார். நான் அப்போது அழைப்பினை எடுப்பதற்குள் அழைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது. எனவே நான் அவரை உடனடியாக தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் பழனி பைபாஸ் சாலை அருகே வருமாறு கூறினார். நான் உடனே பழனி பைபாஸ் சாலைக்கு சென்று அங்கிருந்து அவரது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பேசிய போது, திருச்சி சாலைக்கு செல்லும் பிரிவில் உள்ள மகாலெட்சுமி அய்யங்கார் பேக்கரிக்கு வருமாறு கூறினார். நான் அங்கு சென்று மீண்டும் 10.24 மணிக்கு செல்போனில் தொடர்பு கொண்ட போது, அவர் கையை உயர்த்தி என்னை அழைத்தார். அப்போது அவர் சாதாரண உடையில் தான் இருந்தார். நான் அவரிடம் சென்றபோது கிளப் வைத்து நடத்துகிறீர்கள், ஆனால் இதுவரை என்னை வந்து பார்க்கவில்லை என்று கூறினார். அதற்கு நான் இதுவரை யாருக்கும் லஞ்சமாக பணம் கொடுத்ததில்லை என்று கூறினேன். யாருக்கும் கொடுக்காவிட்டால் பரவாயில்லை, எனக்கு மாதந்தோறும் ரூ.10,000/-ம் கொடுக்க வேண்டும் எனக் கூறினார். என்னுடைய Club பெரிய அளவில் வருமானம் ஈட்டுவது இல்லை, அதனால் என்னால் பணம் கொடுக்க இயலாது என்று கூறினேன். அதற்கு அவர் எல்லா கிளப்பும் தருகிறார்கள், அதனால் நீங்களும் தரவேண்டும் எனக் கேட்டார். நான் அப்போதும் பணம் கொடுக்க மறுத்த காரணத்தினால், அவர் என்னை மீறி கிளப்பினை நடத்த முடியுமா எனவும், நான் கிளப்பிற்கு வரும் உறுப்பினர்கள் மீது வழக்கு பதிவு செய்வேன் என்றும் மேலும் மது பாட்டில்களை கிளப்பிற்குள் வைத்து உங்கள் மீது பொய் வழக்கு போடுவேன் என்றும் மிரட்டினார். நான் அதனால் மிகவும் பயந்து, கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர் ரூ.8,000/-ம் கொடுங்கள் எனவும், அருகில் உள்ள ATMல் எடுத்து வந்து தருமாறும்

கட்டாயப்படுத்தினார். நான் அதனால் மிகவும் பயந்து அருகில் உள்ள ATMல் சென்று பணம் ரூ.8,000/-ம் எடுத்தேன். மீண்டும் நான் அங்கு வந்து அவரிடம் பேசியபோது, அவர் சீருடையில் இல்லாததால் ஒருவேளை பொய்யாக யாரும் நம்மிடம் பணம் பறிக்கிறார்களோ என்று திடீரென சந்தேகம் ஏற்பட்டது. நான் சுதாரித்துக்கொண்டு ATMல் பணம் வரவில்லை என்று கூறிவிட்டேன். அப்போது அவர் பணத்தினை ரெடி பண்ணிவிட்டு மாலை 5 மணிக்கு செல்போனில் அழைக்குமாறு கூறினார். பின்பு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மாலை 5.10 மணிக்கு SI திரு.கலையரசன் எனது செல்போனிலும், வாட்ஸ்அப் காலிலும் அழைத்தார். நான் எடுக்கவில்லை. மறுநாள் 30.03.2026ம் தேதி காலை சுமார் 7.54 மணிக்கு அவரை செல்போனில் தொடர்பு கொண்டு, சார் நேத்து ஞாயிற்றுகிழமை என்பதால் சாப்பிட்டு உறங்கிவிட்டேன். அதனால் போனை எடுக்கவில்லை எனக் கூறினேன். அப்போது அவர் வேலையாக இருப்பதால் மீண்டும் கூப்பிடுவதாக சொன்னார். மறுநாள் 31.03.2026ம் தேதி மாலை சுமார் 6.32 மணிக்கு SI திரு.கலையரசன் என்னை அழைத்து, ஏன் பணம் கொண்டுவரவில்லை எனக் கேட்டார். அப்போது நான் பணம் தயார் செய்து விட்டு அழைக்கிறேன் எனக் கூறினேன். நேற்று 01.04.2026-ம் தேதி மாலை சுமார் 6.29 மணிக்கு என்னை செல்போனில் அழைத்து நத்தம் சாலையில் உள்ள திண்டுக்கல் மாநகராட்சி மழைநீர் சேகரிப்பு மையத்திற்கு அருகில் வருமாறு கூறினார். அதன் பேரில் நான் அங்கு சென்று இரவு சுமார் 7.09 மணிக்கு அவருக்கு பேசி வந்துவிட்டதாக கூறினேன். அவரும் 10 நிமிடத்தில் அங்கு சீருடையில் வந்தார். அப்போது அவர் பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா எனக் கேட்டார். நான் அதற்கு மாதந்தோறும் ரூ.8,000/-ம் கொடுப்பது சிரமம், எனவே குறைத்து கொள்ளுங்கள் எனக் கூறினேன். அதற்கு அவர் எந்த பிரச்சனை என்றாலும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்றும், ரூ.8,000/-ம் ஒரு பெரிய தொகை இல்லை என்று கூறினார். ஆனால் நான் மீண்டும் கிளப்பில் அவ்வளவு வருமானம் இல்லை என்று கூறி, மீண்டும் குறைத்துக் கொள்ளுமாறு கேட்டதால், அவர் ரூ.1,000/-ம் குறைத்துக் கொண்டு, ரூ.7,000/-ம் கொடுங்கள் என்று கூறினார். மேலும் பணம் ரூ.7,000/-ம் தயார் செய்து விட்டு, நாளை 02.04.2026ம் தேதி மதியம் 1 மணிக்கு அவரை செல்போனில் அழைக்குமாறும், அப்போது அவர் சொல்லும் இடத்திற்கு வந்து பணத்தினை கொடுக்குமாறும் கூறினார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். முறைப்படி அனுமதி பெற்றும், சட்ட விதிகளுக்கு உட்பட்டும் நடத்தி வரும் நிலையில், திண்டுக்கல் தாலுகா SI திரு.கலையரசனுக்கு மாதந்தோறும் ரூ.7,000/-ம் லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.7000/- லஞ்சமாக கேட்ட திண்டுக்கல் தாலுகா SI

திரு.கலையரசன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த புகாருடன் நான் SEA HORSE WELFARE ASSOCIATION என்ற பெயரில் பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற உத்தரவு ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் திண்டுக்கல் தாலுகா SI திரு.கலையரசன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.7,000/-ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (S.M.Sughumar, 02.04.2026)

Sir, Received the complaint on 02.04.2026 at 11.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.03/2026, u/s.7(a) of P.C Act 1988, as amended in 2018, on 02.04.2026 at 12.00 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul, 02.04.2026)

Original FIR along with computer typed complaint of Tr.S.M.Sughumar, S/o.Tr.Savariar, Door No.7/64, Deva Sahaya Nagar, West Marianathapuram Dindigul East Taluk, Dindigul and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Judge Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

J Rupa 02/04/26

(J.Rupa Geetharani),
Inspector of Police,
V&AC, Dindigul